# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 11,771 — 1959 ජූනි 12 වැනි සිකුරාදා — 12.6.1959

11,771 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு ஆனி மாதம் 12 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV — உள்ளூர் ஆட்சி

## அறிவித்தல்கள்

### 1946 ம் ஆண்டின் 12 ம் இலக்க கேளிக்கை வரிச்சட்டம்

1946 ம் ஆண்டின் 12 ம் இலக்க கேளிக்கை வரிச்சட்டத்தின் 2 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின்கீழ் மட்டக்களப்பு மாவட்டத்து மண்முனை வடகிழக்கு (தென் பகுதி) கிராமப் பகுதியின் கிராமச் சங்கம் நிறைவேற்றிய கீழ்க்காணும் தீர்மானம் அப்பிரிவின் (2) ம் உட்பிரிவின் தாற்பரியப்படி உள்ளூராட்சி, கலாசார விவகார அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டுப் பிரசுரிக்கப்படுகின்றது:—

**தீர்மானம்**

" இச்சங்கமானது, 1946 ம் ஆண்டின் 12 ம் இலக்க கேளிக்கை வரிச்சட்டத்தின் 2 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின்படி, சங்கத்தின் பரிபாலன எல்லைகளுக்குள் நடைபெறும் (சட்டத்தில் வியாக்கியானம் செய்யப்பட்டிருக்கும்) கேளிக்கைகளுக்கான பிரவேசக் கட்டணங்கள் மீது இதன்கீழ் காட்டப்பட்டிருக்கும் விகிதங்களின்படியான ஒரு வரியை, இத்தீர்மானம் " கசெற் "றில் பிரசுரமாகும் திகதியிலிருந்து இத்தால் விதித்துத் திரட்டுகின்றது.

| கட்டணத் தொகை | வரி விகிதம் ரூ. ச. |
|---|---|
| வரித்தொகை நீங்கலாகப் பிரவேசக் கட்டணம்— | |
| (அ) 20 சதத்துக்குக் குறையாமலும் 50 சதத்துக்குக் கூடாமலுமிருப்பின் .. .. | 0 5 |
| (ஆ) 50 சதத்துக்குக் கூடுதலாகவும் ரூபா 1 க்குக் கூடாமலுமிருப்பின் .. .. | 0 10 |
| (இ) ரூபா 1க்குக் கூடுதலாகவும் ரூபா 1.50க்குக் கூடாமலுமிருப்பின் .. .. | 0 15 |
| (ஈ) ரூபா 1.50க்குக் கூடுதலாகவும் ரூபா 2க்குக் கூடாமலுமிருப்பின் .. .. | 0 20 |
| (உ) ரூபா 2க்குக் கூடுதலாகவும் ரூபா 3க்குக் கூடாமலுமிருப்பின் .. .. | 0 30 |
| (ஊ) ரூபா 3க்குக் கூடுதலாகவும் ரூபா 4க்குக் கூடாமலுமிருப்பின் .. .. | 0 40 |
| (எ) ரூபா 4க்குக் கூடுதலாகவும் ரூபா 5க்குக் கூடாமலுமிருப்பின் .. .. | 0 50 |
| (ஏ) ரூபா 5க்குக் கூடுதலாகவும் ரூபா 10க்குக் கூடாமலுமிருப்பின் .. .. | 1 0 |
| (ஐ) ரூபா 10க்குக் கூடுதலாயிருப்பின்— | |
| (i) முதலாவது ரூபா 10க்கும் .. | 1 0 |
| (ii) மற்ற ஒவ்வொரு ரூபா 5க்கும் அல்லது அதற்குக் குறைந்த தொகைக்கும் .. | 1 0 |

வீ. சீ. ஜயசூரிய,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி, கலாசார விவகார அமைச்சு.

கொழும்பு,
1959 ம் ஞூ மே மீ 27 ந் உ.


இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.